மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கேள்வியைப் போடுங்கள், மற்ற விவரங்களைப் பேசக்கூடாது.

திரு. கோவை செழியன் : இப்படி அசிங்கமான புத்தகங்களைப் போடுகிறார்கள். அவர்களை நடுரோட்டில் வைத்துச் சுட்டால் என்ன என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆபாசமான புத்தகங்களை அவ்வப்பொழுது காவல் துறையினர் பறிமுதல் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட புத்தகங்களை வெளியிடுபவர்கள்மீது நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். ஆனால் கேள்வியில் கேட்டிருப்பது, தரமான நூல்களை எழுதுபவர்களுக்கு உதவி அளிக்கப்படுமா என்ற கருத்தைக் கேட்டிருக்கிறார்கள். இதற்கான திட்டம் அரசாங்கத்தின் நடைமுறையில் இருந்து வருகிறது.

Scout Movement

* 75 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the steps taken to expand the Scout Movement in this State?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநிலத்திலுள்ள எல்லா இடைநிலை மற்றும் ஆரம்பப் பள்ளிகளில் சாரணத் திட்டத்தினை அமுல் செய்ய சம்பந்தப்பட்ட ஆய்வு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இது குறித்து முன்னேற்றத்தினையும் அவ்வப்போது தெரியப்படுத்த அவர்கள் வேண்டப்பட்டுள்ளனர். தவிர, சென்னையிலுள்ள மாநில பாரத சாரணர், மற்றும் சாரணியர் இயக்க (Bharat Scouts and guides) தலைமையிடத்தின் தொடர்போடு சாரண ஆசிரியர்கள் மற்றும் சாரணியர் தலைவிகளுக்குத் தக்க பயிற்சி அளிக்குமாறும் வேண்டப்பட்டுள்ளனர். இத்திட்டம் நன்கு செயல்பட தங்களது ஒத்துழைப்பைத் தருமாறு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் வேண்டப்பட்டுள்ளனர்.

THIRU N. DENNIS : May I know, Sir, whether the Government would take steps to make it compulsory?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது கட்டாயப்படுத்தும் தன்மையில் இல்லை. ஆனால் எல்லா உயர்நிலைப்பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் சாரணர், சாரணியர் இயக்கத்தை அமைக்க வேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்டு வருகிறது. அதற்கான திட்டம் பள்ளிக் கல்வி இயக்குநரிடம் கேட்கப்பட்டுள்ளது. இதற்கு ஒதுக்கும் பணம் குறைவாகத்தான் இருக்கிறது. அந்தத் திட்டம் வந்ததற்குப் பிறகு நிதி உதவியையும் செய்து எல்லாப் பள்ளிகளிலும் இந்த சாரணர் சாரணியர் இயக்கம் இருக்க வேண்டுமென்ற கொள்கையை அரசு கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

New building for school at Ashok Nagar

* 76 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether any new building has been constructed for the Corporation School at Ashok Nagar during 1972–73; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) புதியதாகக் கட்டப்பட்ட இக்கட்டிடம் ஏற்கெனவே இவ்விடத்தில் உள்ள மூன்று வகுப்பறைகளைக் கொண்ட பள்ளிக்கான இணைப்பாகும். புதிதாகக் கட்டப்பட்டுள்ள இக் கட்டிடத்தில் நான்கு வகுப்பறைகளும், தலைமை ஆசிரியரின் அறையும், நீரடிககழிப்பிடமும் உள்ளன. இக்கட்டிடத்தின் மொத்தத் தரைப் பரப்பு 2,562 சதுர அடிகளாகும்.

THIRU N. DENNIS: May I know the basis adopted for giving priority to put up new School buildings?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தந்த மாவட்டத்திலேயுள்ள தலைமைக் கல்வியதிகாரிகள் அந்தந்தப் பள்ளிகளின் தன்மைகளையெல்லாம் ஆராய்ந்து கூறுகிறார்கள். சில ஊர்களில் ஈட்டு மான்யம் பெற்று தொகையாக வழங்குகிறார்கள். ஆகவே, மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரிகள் ஆராய்ந்து எங்கெங்கு தேவைப்படுகிறது, எந்தெந்த இடத்திலே நிதி உதவி பெற முடியாமல் இருக்கிறது என்று கண்டறிந்து அதற்குத் தகுந்த மானியம் அளிக்கப்படுகிறது, அதற்கேற்ற கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.